(a) whether there are proposals under the consideration of the Government to open a book binding centre at Egmore, Madras City for the physically handicapped; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்காக, 'புக் பைண்டிங்' அல்லது வேறு வகையிலே அவர்கள் தொழிலைக் கற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு அரசு நம்முடைய அச்சகத்தில் ஏதாவதொரு பிரிவை ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "உடல் ஊனமுற்றோர்க்காக, சென்னை எழும்பூரில் புத்தகம் தைக்கும் நிலையம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?" என்ற கேள்விக்கு 'இல்லை' என்று விடையளித்தேன். ஆனால், 'சொஸைட்டி ஃபார் தி வெல்ஃபேர் ஆஃப் தி ஹாண்டிகேப்டு' என்று சொல்லப்படுகிற ஊனமுற்றவர்களுடைய நல்வாழ்வுக்காக இருக்கும் கழகம் இப்பொழுது ஊனமுடையவர்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு நிலையம் ஏற்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. அது திட்ட அளவில் இருக்கிறது; இன்னும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை. ஆனால், அப்படியொரு நிலையத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அந்தக் கழகத்திற்கு இருந்து வருகிறது.

இளநிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள்

***656 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளநிலை (Lower Grade) உடற்பயிற்சி ஆசிரியருக்குரிய பயிற்சிப் பிரிவை எடுத்துவிடும் கருத்து அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இளநிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள், வேலைக்குச் செல்ல முடியாத நிலையும், வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படாத நிலையும் இருந்து வருகிறது. ஹையர் கிரேடு பயிற்சிபெற்ற ஆசிரியர்களை மட்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஒன்று —இளநிலை உடற்பயிற்சியையே எடுத்துவிடவேண்டும்; அல்லது

அத்தகைய பயிற்சி பெற்றவர்களுக்கு எதாவது விழுக்காடு அடிப்படையில் வேலைவாய்ப்புத் தர ஆவன செய்யவேண்டும். இரண்டில் எதை அரசு செய்ய முடிவு எடுத்திருக்கிறது என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது உடற்பயிற்சி இளநிலை (லோயர் கிரேடு) பிரிவை எடுத்துவிடும் யோசனை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று சிக்கல்கள் அங்கே இருக்கின்றனவா என்று ஆராய வேண்டும். பயிற்சிபெற்ற எத்தனை இளநிலை உடற்பயிற்சி ஆசிரியர் களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமலிருக்கிறது அந்தப் பயிற்சியை நீக்கிவிடத்தான் வேண்டுமா என்பதைப் பரிசீலித்த பிறகுதான் முடிவு எடுக்கவேண்டும். இப்படிப்பட்ட குறிப்புகள் எதும் இப்பொழுது வரவில்லை.

திரு. ஆர். கருப்பையா: இளநிலைப் பயிற்சிபெற்றவர்களை ஊராட்சி ஒன்றியங்களின்கீழுள்ள உயர்தொடக்கப் பள்ளிகளில் ட்ரில் மாஸ்டர்களாக வேலைக்கு அமர்த்தும் திட்டம் அரசுக்கு உண்டா? பல ஊராட்சி ஒன்றிய உயர்தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் அதிகமாக இருந்தும் உடல் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. இத்தகைய இளநிலை உடற்பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அங்கே அமர்த்தினால் தன்மூலம் வேலைகிடைக்கவில்லை என்ற குறை நீங்கக்கூடும். ஆகவே, இந்த யோசனையை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முதலில் குறிப்பிட்டபடி, இத்தகைய பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களை எங்கெங்கே வேலைக்கு அமர்த்தமுடியும் என்பதையும் கண்டறிந்தபிறகுதான், பரிசீலித்து நக்க முடிவு எடுக்க வேண்டும்.

Effluence from Padalam Sugar Mills.

* 657 *Q.*—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(*a*) whether the industrial waste of sugar mill at Padalam in Chingleput taluk is not treated properly and is causing inconvenience and creating insanitary conditions to the villagers surrounding that area;

(*b*) whether the sugar mill authorities are constructing a well in Palar river near the mill; and

(*c*) whether it is a fact that the well water of the surrounding villages have been affected because of the industrial waste of the sugar mill?